SRESHT
A SRIHER - INDIA ALLIANCE LAB

SRI RAMACHANDRA
FACULTY OF AUDIOLOGY AND
SPEECH LANGUAGE PATHOLOGY

# செவி மற்றும் பேச்சு-மொழி குறைபாடுள்ள குழந்தைகளை கண்டறிந்து மறுவாழ்வு அளிப்பதற்கான புதிய விரிவான சமூக தொலை-பயிற்சி (SRESHT மாடல்)

## இறுதிக்கட்ட பரப்புரை அறிக்கை

**செய்திப் பரப்பு நிலை:** கட்டுப்படுத்தப்பட்டது [RE]
**தேதி:** 19.02.2026

**அறிக்கை அளிப்பவர்:** டாக். வித்யா ராம்குமார்
பேராசிரியர், ஸ்ரீ ராமச்சந்திரா கேட்பியல் மற்றும் பேச்சு, மொழி நோயியல் துறை, SRIHER (DU), போரூர், சென்னை


**நிதியுதவி:** இந்த திட்டத்திற்கு DBT/Wellcome Trust India Alliance (IA/CPHI/19/1/504614) மூலம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது

SRESHT
A SRIHER - INDIA ALLIANCE LAB

SRI RAMACHANDRA
FACULTY OF AUDIOLOGY AND SPEECH LANGUAGE PATHOLOGY

கிராமப்பகுதிகளில் வசிக்கும் சிறுசிறு பிள்ளைகளுக்கு ஆரம்ப நிலை செவி மற்றும் மொழி–பேச்சு சேவைகள் கிடைப்பது பெரும் சவாலாக இருந்து வருகிறது. இந்த நிலையில் இப்புதிய திட்டம், தமிழ்நாட்டின் பெரம்பலூர் மாவட்டத்தில் 6 வயதிற்குள் உட்பட்ட பிள்ளைகளுக்கு செவி மற்றும் மொழி–பேச்சு குறைபாடுகளுக்கான பரிசோதனை, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை சேவைகளை அளிக்க ஒரு விரிவான தொலை-முறை பயிற்சி மாடலை உருவாக்கி, அதை அமல்படுத்தி ஆய்வு செய்வதை நோக்கமாக கொண்டது.

## SRESHT மாடல்




__முக்கிய பலன்கள்:__

### காது மற்றும் பேச்சு குறைபாடுகளுக்கு விரிவடைந்த ஆரம்பநிலை பரிசோதனை

- கிராமப்புற சமூகங்களில் உள்ள வளர்ந்த குழந்தைகளுக்கு (பிறந்த குழந்தைகள் அல்லாத) கேள்வி மற்றும் பேச்சு மொழி குறைபாடுகளை மொபைல் செயலி (HearKids) பயன்பாட்டின் மூலம் சமுதாய மட்டத்தில் (அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளின் ஆதரவோடு) பரிசோதனை செய்வது, இத்தகைய குறைபாடுகளை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவியுள்ளது
- மொபைல் செயலி மூலமும், நோய் அறிகுறிகள் மூலமும் செவி மற்றும் பேச்சு-மொழி கோளாறுகளை பரிசோதிக்கும் முறைகள் குறித்த பயிற்சி மற்றும் விரிவுரை மருத்துவ பயிற்சியாளர்களுக்கு (DHS மூலம்), SSA ஆசிரியர்களுக்கு (SSA மூலம்), மற்றும் சுயசார்பு குழுக்களுக்கு பயிற்சி (கிராமப்புற வளர்ச்சி) வழங்கப்பட்டது.
- சமூக மட்டத்தில் சுயஉதவி குழு உறுப்பினர்களின் உதவியுடன் நடந்த குழந்தைகளுக்கான பரிசோதனைகள், PHC-யில் (நர்சுகள் மூலம்) அல்லது SSA பிளாக் ரிசோர்ஸ் சென்டரில் (சிறப்பு கல்வியாளர்கள் மூலம்) வழங்கப்படும் பரிசோதனையை காட்டிலும் அதிகபட்ச பயனர்களை சென்றடைந்தது
- பயிற்சி பெற்ற சுய உதவி குழு பணியாளர்கள், பெரம்பலூர் மாவட்டத்தின் நான்கு தொகுதிகள் முழுவதும் ஜூன் 2023 முதல் ஆகஸ்ட் 2025 வரையளவில், 6 மாதங்கள் முதல் 5 வயது வரை உள்ள 4538 குழந்தைகளுக்கு பேச்சு -மொழி பரிசோதனையும், 4396 குழந்தைகளுக்கு செவி பரிசோதனையும் செய்துள்ளனர்

SRESHT
A SRIHER - INDIA ALLIANCE LAB

SRI RAMACHANDRA
FACULTY OF AUDIOLOGY AND
SPEECH LANGUAGE PATHOLOGY

- SRESHT மாடல், வரையறுக்கப்பட்ட ஊன அளவுக்கான செவி பரிசோதனையை 6 வயது வரையுள்ள குழந்தைகளும் பெறும்படி விரிவாக்கியுள்ளது; இது பிறந்த குழந்தை பரிசோதனை தாண்டி, அனைத்து குழந்தைகளுக்கும் சமூக நல திட்டங்கள் மற்றும் ஆரம்ப சிகிச்சை சேவைகளை அணுகுவதை எளிமையாக்கியுள்ளது. மொபைல் செயலியில் உள்ள இரைச்சல் கண்காணிப்பு கருவியை பயன்படுத்துவதால், ஒஏஇ (OAE) சோதனையை சார்ந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை
- மேலும், பேச்சு -மொழி குறைபாடுகளுக்கான ஆரம்ப நிலை பரிசோதனையையும் sresht மாடல் வழியாக செய்ய முடிகின்றது
- சுயஉதவி குழு பணியாளர்களால் செயலி மூலம், சமூக அளவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை, அந்த பணியாளர்களின் நம்பகத்தன்மையினால் குடும்பங்களால் நம்பப்பட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வந்தது
- சமூகத்தில் நடக்கும் பரிசோதனை, பேச்சு மற்றும் செவித்திறன்களின் சாதாரண வளர்ச்சிக் கட்டங்களைக் குறித்து பெற்றோர்களின் விழிப்புணர்வை உருவாக்கும் ஒரு வழியாகக் கருதப்பட்டது

## மக்களுக்கு அருகிலேயே விரைவான நோயறிதல் சேவைகள்

- SRESHT மாடல் தொலை வழி நோயறிதல் மூலம் செவி கோளாறுகளை கண்டறிந்த பின்னர் 'பின்தொடர் வீதம்' கணிசமாக (49%) அதிகரித்துள்ளது. இவ்வாறு பின்தொடரப்பட்ட 65% குழந்தைகளில் செவி கோளாறு இருப்பது கண்டறியப்பட்டது, 75% குழந்தைகளுக்கு காதுகேள் கருவி/கோக்ளியார் இம்பிளாண்டு பொருத்தப்பட்டுள்ளது. அதில் 63% பேர் மறுவாழ்வு சேவையும் பெற்றுள்ளனர்
- DDAWO அலுவலகத்தின் மொபைல் வேன் மூலம் செவி மற்றும் பேச்சு குறைபாடுகளுக்கான தொலைநிலை நோய் கண்டறிதல் தொகுதி அளவில் திறம்பட நடந்தது. தொழில்நுட்ப பயன்பாட்டால் கூடுதல் செயல்முறைகள் சேர்க்கப்பட்டிருப்பினும், இது பயனர்களுக்கு பயண நேரத்தையும், நிதிச்சுமையையும் குறைத்தது. எனினும், மொபைல் வேன் பரிசோதனையின் போது, தேவையான ஏர் கண்டிஷன் இல்லாதது போன்ற சில சிக்கல்களும் தெரிவிக்கப்பட்டன

## மக்களுக்கு அருகிலேயே விரைவான மறுவாழ்வு சேவைகள்

- SRESHT மாடல் மூலம் பேச்சு பயிற்சிக்கான 'பின்தொடர் வீதம்' கணிசமாக (49%) அதிகரித்துள்ளது
- SRESHT மாடலின் மூலம் 12 க்கும் மேற்பட்ட பயிற்சி அமர்வுகளில் கலந்து கொண்ட எட்டு குழந்தைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தனர்; அவர்களின் செவி மற்றும் பேச்சுதிறன் மதிப்பெண்கள் சராசரி 28 புள்ளிகள் அதிகரித்துள்ளது. எனவே, தொலைசிகிச்சையுடன் (பெற்றோர்-ஆதரவுடன்) இணைந்த ஆடியாலஜிஸ்ட்/பேச்சு நிபுணரின் நேரடி ஆலோசனையினால் (hybrid-ஹைபிரிட்) குழந்தைகள் மற்றும் பெற்றோர் பயன்பெற்றனர்

SRESHT
A SRIHER - INDIA ALLIANCE LAB

SRI RAMACHANDRA
FACULTY OF AUDIOLOGY AND SPEECH LANGUAGE PATHOLOGY

- பெற்றோர் ஆதரவுடன் நடத்தும் தொலை-சிகிச்சையை குறித்த ஐயம் பெற்றோர்களுக்கு காணப்பட்டது; அவர்கள், நிபுணர்களால் நேரடியாக வழங்கப்படும் சிகிச்சையை விரும்புகின்றனர். மேலும், குழந்தை பராமரிப்பு குறித்தும் கவலைப்படுகின்றனர்
- பெற்றோர் ஆதரவுடன் நடத்தும் தொலை-சிகிச்சையை கிராமப்புற கட்டமைப்புகளுக்கு ஏற்ப மறுசீரமைப்பது அவசியமாக உள்ளது

## செலவு பற்றிய குறிப்புகள்

- வழக்கமான சோதனை முறைகளை ஒப்பிடும்போது SRESHT மாடலில் காது கேளாமையை பரிசோதித்தல் ஒவ்வொரு குழந்தைக்கும் சுமார் ரூ.227–293 செலவாகிறது
- சொற்ப செலவுகளிலேயே தொலை -நோயறிதல் சேவைகள் கிடைப்பதால் SRESHT மாடல் லாபமளிக்கக்கூடியதாக உள்ளது
- SRESHT மாடலில் ஆடியாலஜிஸ்ட் மற்றும் பேச்சு நிபுணரால் வழங்கப்படும் ஹைப்ரிட் சிகிச்சைக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 15000/- அதிகம் வீதம் செலவாகிறது. சிகிச்சை பெறுவதற்காக வேறு வாய்ப்பும், போதிய சிகிச்சை, நிபுணர் வசதிகளும் இல்லாததால் SRESHT மாடல் லாபகரமாக உள்ளது

## அமலாக்கம் மற்றும் விரிவாக்கம்

- தொகுதி வாரியான நோயறிதல் மற்றும் சிகிச்சை சேவைகள் பெற்றோர்களால் மேலானதாகவும் சேமிப்பூட்டுவதாகவும் கருதப்படுகின்றது
- நோய் கண்டறிதல் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் வரை பெற்றோர்களும் சிறந்த தொடர்ச்சியான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாக உணர்ந்தனர்
- இந்த மாடல் பல பங்குதாரர்களை மற்றும் துறைகளை ஈடுபடுத்தியும், பல அடுக்கு ஒருங்கிணைப்பையும் கொண்டுள்ளது. மேலும் இதை அமலாக்கும் போது தொடர்பயிற்சியையும், மேற்பார்வையையும் சார்ந்துள்ளது
- இனி, ஆய்வு குழுக்களுக்கு பதிலாக (திறன் வளர்ச்சி பயிற்சி பெற்ற) உள்ளூர் செயல்பாட்டு குழுக்கள் மூலம் எதிர்கால அமலாக்க திட்டங்களை செயல்படுத்தி, மதிப்பிடல் வேண்டும்
- கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் SRESHT-ஐ தற்போதுள்ள அரசு திட்டங்களுக்கு (எ.கா., TN உரிமைகள், OSC) ஒத்ததாகவும் அமலுக்கு தயாராக உள்ளதாகவும் கருதுகின்றனர்
- சேவை திட்டங்களின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் அரசின் அதிகாரப்பூர்வ செயல்முறைகள் இன்னும் தெளிவாக இல்லாததால் அதை குறித்த ஆய்வு அவசியமாக உள்ளது
- பெற்றோர் பயிற்சியும், சமூக ஆதரவும் செவி -பேச்சு குறைபாடுகளை குறித்த வெட்கத்தையும் ஐயத்தையும் தகர்க்க உதவுகிறது

**SRESHT**
A SRIHER - INDIA ALLIANCE LAB

**SRI RAMACHANDRA**
FACULTY OF AUDIOLOGY AND SPEECH LANGUAGE PATHOLOGY

**1** ஜன - செப் 2021: கைபேசி மூலமான காது, பேச்சு-மொழி பரிசோதனை கருவி வடிவமைத்தல்



**2** ஆகஸ்ட் 2021 : சூழ்நிலை ஆய்வு



**3** ஜூன் 2022: தரைமட்ட பணியாளர்களுக்கு பயிற்சி



**4** 2022: மாநில ஆணையரகம் சந்திப்பு



**5** அக் 2023: பெற்றோர் திறன் வளர்ச்சி





**6** டிச 2023: பெற்றோர் பயிற்சி திட்டம்



**7** 2023: முகாம்



**SRESHT**
A SRIHER - INDIA ALLIANCE LAB

**SRI RAMACHANDRA**
FACULTY OF AUDIOLOGY AND SPEECH LANGUAGE PATHOLOGY

## 8

2023: ஆர்ட் கனெக்ட்: கிராமப்புற பகுதிகளில் காது கேளாமையை கையாள விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்











## 9

2023: குழந்தைகளின் பேச்சு, மொழி மற்றும் செவி குறைபாடுகள் மற்றும் சிகிச்சைகளை (SRESHT மாடல்) குறித்து பொதுமக்களுக்கான பரப்புரை









## 10

2022-2025: பேச்சு, மொழி மற்றும் செவி பரிசோதனை






## 11

2023-2025: தொலைநிலை நோயறிதல் மற்றும் ஆலோசனை










## 12

2023-2025: தொலை சிகிச்சை மற்றும் பெற்றோர் ஆலோசனை







## 13

ஜூலை 2025: காக்ளியார் இம்பிளான்ட் பழுதுபார்த்தல்





# நன்றியுரை

**அரசு அலுவலகங்கள்:** மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், தமிழ்நாடு அரசு; DDAWO பெரம்பலூர்; சமக்ரா சிக்ஷா அபியான் (SSA), பள்ளிக் கல்வித் துறை, பெரம்பலூர்; DPO- ICDS அலுவலகம், பெரம்பலூர்; மாவட்ட மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநரகம், அரியலூர் & பெரம்பலூர் மாவட்டங்கள்; தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் லிமிடெட்.

**இணை ஆய்வாளர்கள் / பங்களிப்பாளர்கள்:** டாக். அனில் பிரபாகர், டாக். ஷுபா குமார், டாக். மன்னவா சன்னி, டாக். லட்சுமி வெ, டாக். சுப்ரமணியன் பா, பேரா. ரூபா நாகராஜன்

**ஆய்வாளர்கள்:** டாக். நீதி. ஜெ, டாக். தீபஸ்ரீ ஜோ, திருமதி. லேகா நா, திரு. விஷ்ணு சரவணா ரா, திருமதி. ரோஜா ராணி மா & செல்வி. தீக்ஷிதா ஏ எஸ்

**சிறப்புப் பள்ளி ஆசிரியர்கள்:** திருமதி. சுசிலா மு & செல்வி. ஆர்த்தி N

**திட்ட நிர்வாகிகள்:** செல்வி. கோமதி கு, திருமதி. ராதிகா மா,

**அரசு சாரா நிறுவனங்கள்:**

RUWSEC

Enability

UNION IS STRENGTH
INDO TRUST - PERAM BALUR

SERVICE TO HUMANITY IS SERVICE TO GOD
ANBAGAM
An Initiative by TERDOD


**ஹோஸ்ட் நிறுவன ஆதரவாளர்கள்:**


பேராசிரியர். கல்பனா பாலகிருஷ்ணன், டீன் (ஆராய்ச்சி) & அவரது அலுவலகம், SRIHER (DU)

பேராசிரியர். பிரகாஷ் பூமிநாதன், முதல்வர், SRFASLP, SRIHER (DU), சென்னை (ஸ்பான்சர்/ஹோஸ்ட் நிறுவனம்)


பேராசிரியர். ஹன்னா கூப்பர், லண்டன் ஸ்கூல் ஆஃப் ஹைஜீன் அண்ட் டிராபிகல் மெடிசின், லண்டன், UK (வழிகாட்டி, ஸ்பான்சர், வெளிப்புற ஹோஸ்ட் நிறுவனம்)

பேராசிரியர். ஜேம்ஸ் W ஹால், டிரெக்சல் பல்கலைக்கழகம், அமெரிக்கா, (வழிகாட்டி)














SRESHT

A SRIHER - INDIA ALLIANCE LAB







மேலும் தகவலுக்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

**தொடர்பு கொள்ள:**

மின்னஞ்சல்: sresht.sriher.ia@sriramachandra.edu.in

தொலைபேசி: +91- 90251 18714